# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

# ஆண்டு - 5 (Year 5)

## 1/09/2014 - 31/08/2015 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/11/2024

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

# இளமையிற் கல்

இன்று நான் உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக் கொண்ட விடயம் "இளமையிற் கல்" என்பதாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி.

ஆம். நாம் கற்க வேண்டியவற்றை இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டும். அப்போது தான் கல்வியானது பசுமரத்தாணி போல் என்றும் ஆழப் பதியும்.

கல்வியை மனதிற் பதித்துக் கொள்ள ஏற்ற பருவம் இது என்பது உளவியலாளர்களின் கருத்து. துன்பங்கள் தோன்றாது ஆர்வம் தலை தூக்கி நிற்கும் காலம் இது. இப் பருவத்தில் நாம் பெறும் கல்வி தான் நம் உள்ளத்தைப் பயன்படுத்த வல்லது. நல்லது கெட்டது எது என்பதை எமக்கு அறிந்து கொள்ள உதவுகிறது.

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக "என்றார் வள்ளுவர்.

ஆம். நாம் கல்வி கற்றால் மட்டும் போதாது, கற்றபடி நடக்க வேண்டும். இது ஏட்டுக் கல்வியாக மட்டும் அல்லாமல் வாழ்க்கைக்கு உகந்த கல்வியாகவும் இருத்தல் வேண்டும். இதனை நாம் மனதில் நிறுத்தி பயன் தரும் கல்வியைப் பெற்று நாடும் வீடும் பயன் பெற உதவுவோம்.